சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 04.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **128/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | உதயசந்திரன் |
| தந்தை பெயர் | : | செல்லப்பன் |
| கிராமம் | : | வடக்குத்தெரு,<br>மூவாநல்லூர் |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 24 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

10 மற்றும் 11 எதிரிகளுக்கு எதிராக பிடிக்கட்டளை நிலுவையில் இருந்து வருகிறது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். ( இந்த வழக்கின் தாய் வழக்கான SSC No. 42/2025 என்ற வழக்கில் சாட்சி விசாரணை செய்யப்பட்டதை தொடர்ந்து குற்றவியல் நடைமுறை விதிகளில் உள்ள விதி 32 (3) மற்றும் 32 (5) ன்படி இந்த வழக்கிலும் சாட்சிகள் விசாரணை மேற்கொள்ளபடுகிறது.)

## முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவர் ஆவேன். அ.சா.1 ராதிகாவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 12.10.2021ம் தேதியன்று எனது பெரியப்பா பையன் பிரபாகரன் என்பவர் ஊராட்சி மன்ற தலைவர் இடைத்தேர்தலில் நின்றார். சிறிய வாக்குகள் வித்தியாசத்தில் எனது தம்பி தோல்வியுற்று விட்டார். தேர்தலில் வென்றவர்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கூட்டமாக வந்து தெரு முழுவதும் வெடி வெடித்து கொண்டிருந்தார்கள். இது சம்மந்தமாக பிரச்சனை நடந்ததாக கேள்விப்பட்டேன். எனக்குநேரிடையாக எந்த விபரமும் தெரியாது. போலீசார் விசாரணை செய்யவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

## அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி

கடந்த 12.10.2021ம் தேதியன்று மன்னார்குடி அரசு ராஜகோபாலசுவாமி கலை கல்லூரியில் ஓட்டு எண்ணிக்கை நடந்ததாகவும், அதில் எங்கள் ஊர் அ.தி.மு.க. கட்சியை சேர்ந்த மற்றும் எங்கள் சமூகத்தை சேர்ந்த ரவி என்பவர் ஜெயித்தார் என்றும், அவர் எங்கள் தெருவை சேர்ந்தவர் என்றும், ரவி ஜெயித்தவுடன் கல்லூரியிலிருந்து நானும், எனது தம்பி பிரபாகரன் ஆகியோர் எங்கள் வீட்டிற்கு வந்து விட்டார்கள் என்றும், பின்னர் வெற்றி பெற்ற அ.தி.முக. மற்றும் அ.ம.மு.காவை சேர்ந்தவர்கள் அனைவரும், ஜெயகாந்தன் என்பவர் தலைமையில் மதியம் 03.00 மணியளவில் ஊர்வலமாக வந்து அ.சா.1ன் வீட்டு எதிரில் நின்று வீட்டு முன்பு வெடி வெடித்தனர் என்றும், சத்தம் போட்டு கோசமிட்டனர் என்றும், எனது மனைவியான அ.சா.1 வெளியே வந்து ஏன் எங்கள் வீட்டு முன்னால் நின்று வெடி வெடிக்கிறீங்க, ஜெயிச்சா வீட்டிற்கு போக வேண்டியதுதானே, என கேட்டார் என்றும், அதற்கு கள்ளர் சமூகத்தை சேர்ந்த ஜெயகாந்தன், அறிவழகன், சரவணன், சாணக்கியன், மணியரசன், பிரபு பாலகுரு

மற்றும் எங்கள் சமூகத்தை சேர்ந்த பாண்டியன், ஆகிய 8 பேரும் மற்றும் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத பலரும் ஏண்டி, நீ பொம்பளையா நீ பற பொம்பள எலக்சன்ல நிற்கிறீங்களா என்றும், நீங்க எங்க அளவிற்கு செலவு பண்ணுறீங்களா, ஆளும் கட்சியா இருந்தா நீங்க ஜெயிச்சுருவீங்களா அதான் தோத்து போயிட்டீங்களே என சொல்லி, எங்கள் வீட்டு வாசலில் இருந்து தி.மு.க. பிளக்ஸ் போர்டை பாலகுருவும், பாண்டியனும், சாணக்கியனும், மணியரசனும் கிழித்தெரிந்தனர் என்றும், மேலும் இவர்கள் அனைவரும் கம்புகளோடும், மற்றவர்களும் வீட்டு கேட்டை பிடித்து தள்ளி கொண்டும், கம்பால் தட்டிக்கொண்டும், வீட்டின் உள்ளே வந்து திண்ணையில் கிடந்த பிளாஸ்டிக் சேர்களை கம்பால் அடித்து உடைத்தார்கள் என்றும், ஏன் உடைக்கிறீர்கள் அ.சா.1 கேட்டதற்கு, அவரை தள்ளி , அ.சா.2 பனியனை கிழித்து, கையால் உடம்பில் அடித்தார்கள் என்றும், மேலும் அ.சா.2 ராஜாராமனின் தம்பி பிரபாகரன் பல்லை உடைத்து கையில் கொடுத்துடுவேன் என்றும், நைட்டுக்குள்ள வீட்டை கொளுத்தி விடுவேன் என்றும், மற்றவர்கள், பற பயல்களே உங்களுக்க கொழுப்பாடா என சொன்னார்கள் என்றும், மேலும் அ.சா.2 ஐ பாலகுரு, மற்றவர்களும் கையாலும், கம்பாலும் அடித்தார்கள் என்றும், அ.சா.1 க்கு நெஞ்சு வலியும், மயக்கமும் வந்தது என்றும், பின்னர் உறவினர் தமிழ்மணி என்பவர் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2026.03.04 16:30:48 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.